**புதுச்சேரி அரசு**
**பள்ளிக் கல்வி இயக்ககம்**
*******

நாள்: 24.02.2022

## செய்திக் குறிப்பு

உத்தராகண்ட் மாநிலம் டேராடூனில் அமைந்துள்ள இந்திய தேசிய இராணுவ கல்லூரியில் 01.01.2023 ல் எட்டாம் வகுப்பில் சேர்வதற்கு, புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் அங்கீகரிக்கப்பட்ட அரசு/அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இதற்கான நுழைவுத் தேர்வு எழுத விரும்பும் மாணவ, மாணவிகள் கண்டிப்பாக 01.01.2023 அன்று $11\,^1/_2$ வயதுக்குக் குறையாமலும் 13 வயது பூர்த்தியாகாமலும் இருத்தல் அவசியம் அதாவது 02.01.2010 க்கு முன்னரும் 01.07.2011 க்கு பின்னரும் பிறந்திருக்கக் கூடாது.

மேலும் மாணவ, மாணவிகள் இக்கல்லூரியில் (01.01.2023-ல்) சேரும்பொழுது ஏழாம் வகுப்பு பயிலுபவராகவோ அல்லது தேர்ச்சி பெற்றவராகவோ இருத்தல் வேண்டும்.

**மாணவ, மாணவிகளைத் தேர்வு செய்யும் முறை:**

- 04.06.2022 (சனிக்கிழமை) அன்று காலை 09:30 மணி முதல் 11:00 மணி வரை **கணிதத் தேர்வும்** பிற்பகல் 12:00 மணி முதல் 01:00 மணி வரை **பொது அறிவுத் தேர்வு** மற்றும் பிற்பகல் 02:30 மணி முதல் 04:30 மணி வரை **ஆங்கிலத் தேர்வும்** நடைப்பெறும். (மேற்கண்ட கணிதம் மற்றும் பொது அறிவுத் தேர்வுகளை ஆங்கிலம் அல்லது இந்தி மொழியில் எழுதலாம்.)
- எழுத்துத் தேர்வில் தேர்ச்சி பெறும் மாணவ-மாணவிகள், நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவார்கள்
- நேர்முகத் தேர்விற்கான தேதி மற்றும் இடம், தேர்வு எழுதும் மாநிலத்தின் வாயிலாக மாணவ, மாணவிகளுக்கு தெரிவிக்கப்படும்.
- நேர்முகத் தேர்விற்குப்பின் தேர்வு செய்யப்படும் மாணவ, மாணவிகள் இராணுவ மருத்துவமனையில் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள். மேலும் மருத்துவ பரிசோதனை சேர்க்கையின் ஓர் அங்கமே தவிர சேர்க்கையின் இறுதி அல்ல என்பதை அறியவும்.

**தேர்வு மையம்:**

புதுச்சேரி யூனியன் பிரதேச மாணவ, மாணவிகளுக்கு (04.06.2022) **சனிக்கிழமை** அன்று எழுத்துத் தேர்வுகள் பெருந்தலைவர் காமராஜர் நூற்றாண்டு கல்வித்துறை வளாகம் அண்ணா நகர் புதுச்சேரி-605005. இல் நடைபெறும்.

**விண்ணப்ப படிவம் பெறுவதற்கான வழிகள்:**

விண்ணப்பப் படிவத்தை ஆன்லைன் (online) மூலம் பெறுவதற்கு **www.rimc.gov.in** என்ற வலைதளத்தில் பொதுப்பிரிவினர் ரூ.600/- / அட்டவணை இனத்தவர் மற்றும் பழங்குடியினர் அதற்குண்டான சாதி சான்றிதழுடன் ரூ.555/- செலுத்தி பதிவிறக்கம் செய்யப்பட்ட பணம் செலுத்திய ரசீது (Receipt of payment) மற்றும் தங்கள் முகவரியைத் தெளிவாக குறிப்பிட்டு விரைவு அஞ்சல் மூலமாக கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

**THE RASHTRIYA INDIAN MILITARY COLLEGE,**
**GARHI CANTT, DEHRADUN,**
**UTTARAKHAND-248003.**

(அல்லது)

விண்ணப்பப் படிவத்தை வரைவோலை (**Demand Draft**) மூலம் பெறுவதற்கு தெளிவான அஞ்சல் எண் உள்ள தங்கள் விலாசம் மற்றும் தொலைபேசி எண் ஆகியவற்றுடன் கூடிய கோரிக்கை மனுவுடன், " THE COMMANDANT RIMC DEHRADUN", DRAWEE BRANCH, STATE BANK OF INDIA, TEL BHAVAN, DEHRADUN, (BANK CODE- 01576), UTTARAKHAND கிளையில் மாற்றத்தக்க வகையில், பொதுபிரிவினர் ரூ 600/- / அட்டவணை இனத்தவர் மற்றும் பழங்குடியினர் அதற்குண்டான சாதி சான்றிதழுடன் ரூ 555/- தொகைக்கு வரைவோலையாக (Demand Draft) கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

**THE RASHTRIYA INDIAN MILITARY COLLEGE,**
**GARHI CANTT, DEHRADUN,**
**UTTARAKHAND-248003.**

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் கீழ்க்காணும் முகவரிக்கு 25.04.2022 க்குள் வந்துசேர வேண்டும்.

**இணை இயக்குனர் தேர்வு பிரிவு**
**நான்காம் தளம் ஆ- அடுக்ககம்**
**பெருந்தலைவர் காமராஜர் நூற்றாண்டு கல்வி வளாகம்**
**அண்ணா நகர் புதுச்சேரி-605005.**

(வெ.கோ.சிவகாமி)
**இணை இயக்குநர் (பள்ளிக் கல்வித் துறை)**

இச்செய்திக் குறிப்பினை தங்கள் நாளேட்டில் / தொலைக்காட்சியில் வெளியிட / ஒளிபரப்ப அன்போடு வேண்டுகிறேன்.

(வெ.கோ.சிவகாமி)
**இணை இயக்குநர் (பள்ளிக் கல்வித் துறை)**

Scanned by CamScanner